# VELLORE DIST
# +2 COMMERCE Ist REVISION EXAM 22
# key answer

1.(ஆ) டேலர்
2.(ஆ) குறைவு
3.(அ) நிதியை திரட்டுவதற்கு
4.(ஈ) பலமுறை
5.(ஈ) மேலே உள்ள அனைத்தும்
6.(அ) குறுகிய கால நிதி
7.(அ) வணிக வங்கி
8.(ஆ) வைப்புச் சான்றிதழ்
9.(ஆ) தனது சொந்த நடவடிக்கைளுக்காக
10(அ) முதல் முறை
11.(ஆ) உடனடியாக
12.(இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை
13.(இ) வேலைபகிர்வு
14.(ஆ) கரடி
15.(ஈ) கட்டுப்படுத்துதல்
16.(ஈ) மேற்கூறிய அனைத்தும்
17.(ஈ) மேற்கூறிய அனைத்தும்
18.(அ) குரோத்தர்
19. (இ) / (ஈ) பல்வகை சந்தை / மேற்கூறிய ஏதுமில்லை
20.(ஈ) மேற்கூறிய அனைத்தும்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மைக் கருவிகள்:** கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம்

**22. பங்குச் சந்தை:** பெருநிறுவன மற்றும் பிற பத்திரங்கள் வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைப்பட்ட சந்தையாகும்.

**23. திட்டமிடுதல்:** முன்கூட்டியே முடிவெடுத்தலை திட்டமிடுதல் எனலாம்.

**24. தரகர்:** பத்திரங்களை வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடைநிலையாளர்களாக செயல்படுபவர் தரகர்கள் எனப்படுவார். இவர்கள் தனக்காகப் பத்திரங்களை வாங்கி விற்பதில்லை. இதற்காக கழிவு பெறுவார்.

**25. அமைப்பு நிறுவனங்களின் கூறுகள்** ஒழுஙகாற்று நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், நிதிச் சந்தை, நிதிச் சேவைகள்

**26. உடனடிச் சந்தை:** ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும். தீர்வு உடனடியாக நடைபெறுகின்றது.

**27. மூலதனச்சந்தை:** நீண்ட கால நிதிக் கோரலுக்கு பங்குகள் பத்திரங்களின் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் கூடும் ஒரு இடமே மூலதனச் சந்தை எனப்படும்.

**28. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள்:** தனிநபர், நிறுமங்கள், அரசு வங்கிகள், இதர நிதி நிறுவனங்கள

**29. பணச் சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள்:** பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள், பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள், தனியார் மற்றும் பொதுத் துறை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், வணிக வங்கிகள், மாநில அரசுகள், பொது மக்கள், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கிகள்.

**30. வைப்புச் சான்றிதழின் இயல்புகளை:** கால வைப்புக்கான உரிமை ஆவணம், பிணையமற்ற மாற்று முறை ஆவணங்கள், முக மதிப்பிலிருந்து வட்டத்தில் வெளியிடுதல்.

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. மேலாண்மை வரைவிலக்கணம் தருக.**
மேலாண்மை என்பது முன் கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது – **ஹென்றி.ஃ.போயல்**

**32. மேலாண்மையின் வீச்செல்லையைத் தீர்மானிப்பவை எவை?**
தனிப்பட்ட மேலாளர்களின் பணியில் உள்ள மனோபாவத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது.
தொழில் நிறுவனத்தின் கட்டமைப்பை தீர்மானிக்கிறது.
நிர்வாகக் கட்டமைப்பின் கிடைமட்ட நிலைகளோடு தொடர்புடையது.

**33. மேலாண்மையின் முதன்மைப் பணிகளை பட்டியலிடுக.** திட்டமிடல், அமைப்பாற்றல், பணியமர்த்தல், இயக்குவித்தல், செயலூக்கமளித்தல், கட்டுப்படுத்துதல், ஒருங்கிணைத்தல்.

**34. கலை மான்:-** கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் போது அதைப்பெற்று விற்கக் கூடியவர். இவர் முனைம வேட்டையாளர் என்று அழைக்கப்படுகிறார்.

**முடவாத்து:-** தம் நடவடிக்கையால் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கிற கரடி ஊக வணிகரே முடவாத்து எனப்படுகிறார்.

**35. இரண்டாம் நிலைச் சந்தை:** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.
இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.
நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் செயல்படும்.

**36.உரிமை வெளியீடு:** ஏற்கனவே இயங்கி கொண்டிருக்கும் நிறுமம் கூடுதல் முதலை திரட்ட விரும்பும் போது முன்னுரிமை அடிப்படையில் தனது பங்குதாரர்களுக்கு முதலில் பங்குகளை முன்மொழிவதாகும்.

**37. கருவூல இரசீதின் வகைகள்:** 91 நாட்கள் கருவூல ரசீதுகள் 4 சதவீத தள்ளுபடியில் வெளியிடுதல், 182 நாட்கள் கருவூல ரசீதுகள் - ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடுதல்,
364 நாட்கள் கருவூல இரசீதுகள் - நிலையான தள்ளுபடி இல்லை.

**38. இந்தியாவில் உள்ள ஏதேனும் ஐந்து பங்கு சந்தைகள்:** தி பாம்பே பங்குச் சந்தை, பெங்களூர் பங்குச் சந்தை லிமிடெட், சென்னை பங்குச் சந்தை லிமிடெட், புனே பங்குச் சந்தை லிமிடெட், கனரா பங்குச் சந்தை லிமிடெட்,

**39.பயன்பாட்டு இரசீதுகள்:** தேவை இரசீது என்பது பணம் செலுத்துவதற்கான தேதி எதுவும் குறிப்பிடப்படாத இரசீதாகும். தேவை இரசீது என்பது அந்த இரசீதை வைத்திருப்பவர் தனக்கு எப்பொழுது பணம் தேவைப்படுகிறதோ அப்போது அந்த இரசீதுக்கு பணம் பெற்றுக் கொள்ளலாம்.

**40. வணிக இரசீதுகள்:-** வணிக அமைப்புகளால் வெளியிடப்படுவது. பொருளை விற்பவர், வாங்குபவர் மீது எழுதி கொடுப்பது. 30 நாட்கள், 60 நாட்கள், 90 நாட்கள் என முதிர்வு கொண்டது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி**

**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

| **41.ஆ தன்மைகள்** | **பணச் சந்தை** | **மூலதனச் சந்தை** |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை |
| வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை | பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் |
| பண மதிப்பு | ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்சமதிப்பு ரூ25 இலட்சம் | ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100 |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மைய வங்கி மற்றும் செபி |

**42.அ. பங்குச் சந்தை பணிகளை விவரி.**

**உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:-** ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.

**பத்திரங்கள் மதிப்பீடு:-** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:-** பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.

**மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:-** மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

**மூலதன உருவாக்கம்:-** ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது

| 42.ஆ. அடிப்படை | முதல்நிலைச் சந்தை | இரண்டாம் நிலைச் சந்தை |
|---|---|---|
| பொருள் | புதிய பங்குகளுக்கான சந்தை | முன்னரே வெளியிட்ட பங்குகளுக்கான சந்தை |
| கொள்முதல் | நேரடி | மறைமுகம் |
| விற்கும் முறை | ஒரு முறை | பல முறை |
| ஆதாயம் பெறுபவர் | நிறுமம் | முதலீட்டாளர்கள் |
| விலை | நிலையான விலை | தேவை அளிப்பை பொறுத்து மாறும் |

**43.அ. நிதிச்சந்தையின் பங்கினை விவாதிக்கவும்**

**சேமிப்பை பெருக்குதல்:-** தனி நபர், நிறுவனங்கள், அரசு போன்றவற்றின் மூலம் நிதிகளை பெருக்குகிறது.

**முதலீடுகள்:-** முதலீடுகளை வசூலித்து தேவைப்படுபவர்களுக்கு வழங்குகிறது.

**தேசிய வளர்ச்சி:-** உபரி நிதிகளை ஆக்க பூர்வமான முறையில் பயன்படுத்தி தேசிய வளர்ச்சிக்கு உதவுகிறது.

**தொழில் முனைவோர் வளர்ச்சி:-** தொழில் முனைவோருக்கு நிதி அளித்து அவர்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது,

**தொழில் மேம்பாடு:-** தொழில்துறையை வளர்ச்சி அடையசெய்து பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

**43.ஆ. பணச்சந்தையின் சிறப்பியல்புகளை விவரி**

**குறுகிய கால நிதிகள்:-** பணத்திற்கு நிகரான நிதி சொத்துக்களுக்கான சந்தை.

**முதிர்வு காலம்**:- ஒரு வருடத்திற்கு குறைவான முதிர்வு காலம் கொண்டது.

**பணமாக மாற்றுதல்:-**உடனடியான பணமாக மாற்றும் நிதிச் சொத்துக்களை மட்டுமே பரிமாற்றம் செய்யும்.

**முறையான இடமில்லை:-** பரிவர்த்தனைகள் தொலைபேசி அதாவது வாய்மொழி தொடர்பு மூலமாக நடைபெறும். ஒரு முறையான இடமில்லை.

**மொத்த விற்பனை:-** பணச் சந்தையின் முக்கிய நிதி வழங்கும் மையம் வணிக வங்கியாகும். இது ஒரு மொத்த விற்பனை சந்தையாகும்.

**44.அ. மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விவாதிக்க?**

**பத்திரங்களின் சந்தை:-** பங்குகள் மற்றும் பத்திரங்கள் மட்டுமே விற்கும் சந்தை

**விலை:-** தேவை மற்றும் அளிப்பை பொறுத்து விலை தீர்மானிக்கப்படும்.

**பங்கேற்பாளர்கள்:-** தனிநபர், நிறுமங்கள், அரசு வங்கிகள், நிதி நிறுவனங்கள்.

**இட அமைவு:-** பங்கு மாற்றகம் போன்ற நன்கு தெரிந்த இடமாக இருத்தல் (பங்கு மாற்றகம்)

**சொத்துக்களின் சந்தை:-** நீண்ட கால நிதி சார்ந்த சொத்துக்களான சந்தை.

**44.ஆ. மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விவரி**

**அறிவின் தொகுப்பு:-** தற்போது மேலாண்மை உயர் தனிச்சிறப்பு வாய்ந்த மேலாண்மைக் கோட்பாடு மற்றும் தத்துவத்தை உருவாக்கியுள்ளது.

**மேலாண்மைக் கருவிகள்:-** கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம் என மேலாண்மையின் கிளைகள் பெருகி விரிவடைந்துள்ளது. **தனிப்பாடப் பிரிவுகள்:-** பல்வேறு பல்கலைக்கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் மேலாண்மைக் கல்வியை தனிப்பாடப் பிரிவாகப் அங்கீகரித்திருக்கின்றன.

**சிறப்பீடுபாடு:-** மேலாண்மை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் மேலாண்மை சிறப்புத் தொழிலாளர்களுக்கு சாதகமான அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மனப்பாங்கு தற்போது அதிகரித்து வருகின்றது.

**நடத்தை விதி:-** வாங்குவோர் ஜாக்கிரதை என்ற கோட்பாடு சந்தையில் நீண்டகாலம் நீடிக்காது. தற்போது வாங்குவோர் எச்சரிக்கை என்ற கோட்பாட்டிற்கு பதிலாக விற்பவர் ஜாக்கிரதை என்ற சந்தை நடைமுறைகளை தீர்மானிக்கிறது.

**45.அ. அரசு பத்திரங்களின் இயல்புகள் யாவை?**

**முகமைகள்:-** நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற முகவர்கள் மூலம் விற்கப்படும்.

**ரிசர்வ் வங்கி:-** பத்திரங்கள் வாங்கி, விற்பதில் ரிசர்வ் வங்கி முக்கிய பங்கு வகிக்கிறது.

**வரி விலக்கு:-** முதலீட்டாளர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

**மாற்றம்:-** ஒரு பத்திரத்தை வாங்குவதற்காக மற்றொரு பத்திரத்தை விற்பனை செய்வதாகும்.

**ஏலம் விடுதல்:-** பத்திரங்களை அதிகபட்ச விலைக்கு விற்க மேற்கொள்ளப்படும் ஒரு வர்த்தக முறையே ஏலம் விடுதல் ஆகும்.

**45.ஆ. வணிக இரசீதின் வகைகள்**

**தேவை ரசீது:-** தேவைப்படும் போது பணம் பெறுவது.

**ஆவண இரசீது / தூய்மை இரசீது:-** உரிமை ஆவணம் மூலம் இணைக்கப்பட்டது.

**உள்நாட்டு இரசீது :-** இந்தியாவிற்குள் எழுதப்பட்டு செலுத்துவது.

**வெளிநாட்டு இரசீது:-** இந்தியாவிற்கு வெளியே எழுதப்பட்டு செலுத்துவது,

**தனித்துவ இரசீது:-** வர்த்தக பயன்பாட்டின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

**இருப்பிட ரசீது:-** வியாபார நடவடிக்கை அல்லாமல் உருவாக்கப்பட்ட இரசீது.

**46.அ.ஊக வணிகரின் வகைகள்**

**காளை:-** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் மனப்பாங்கு கொண்டவர்.

**கரடி:-** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். கரடி அல்லது மண்டிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

**கலை மான்:-** கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் போது அதைப்பெற்று விற்கக் கூடியவர். இவர் முனைம வேட்டையாளர் என்று அழைக்கப்படுகிறார்.

**முடவாத்து:-** தம் நடவடிக்கையால் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கிற கரடி ஊக வணிகரே முடவாத்து எனப்படுகிறார்.

**46.ஆ. இந்தியாவில் பங்குச் சந்தையில் முதலீட்டளார்களுக்கான பயன்கள்:-**

**நீர்மைத் தன்மை:-** முதலீட்டாளர்களின் பங்குகளை விரைவாக பணமாக மாற்ற உதவுகிறது.

**மதிப்பீடு செய்தல்:-** முதலீட்டாளர்களின் பத்திரங்களின் மதிப்பை பத்திரிக்கை மற்றும் வலைதளங்கள் மூலம் மதிப்பீடு செய்யலாம்.

**47.அ. திட்டமிடல்:-**

முன் கூட்டியே முடிவெடுத்தல்.

வருங்கால தேவைகளை பூர்த்தி செய்ய மதிப்பிடுதல்.

**ஒருங்கிணைத்தல்:-**

பல்வேறு திறமையுள்ள நபர்களை இணைத்தல்.

அனைத்து செயல்பாடுகளையும் இணைத்தல்.

**47.ஆ. மேலாண்மை கலையா? அறிவியலா? விளக்குக**

மேலாண்மை என்பது ஒரு நுட்பான அறிவியலாகும் ஏனெனில் அறிவியலில் கொள்கைகளை அல்லது தத்துவங்களை ஒரு ஆய்வகத்தில் பரிசோதித்து அவற்றை மிகச் சரியாகவும் நுட்பமாகவும் நிரூபிக்க இயலாமல் போகலாம்.

அது போல மனிதவளம் இயந்திரம் பணம் கச்சாப் பொருட்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வியாபார இலக்குகளை அடையச் செய்வதன் மூலம் மேலாண்மைக் கொள்கைகளை பரிசோதிக்க முடியும்

நிர்வாகம் ஒரு கலை

கலை என்பதன் கருத்தாக்கம் அன்றாட வாழ்வின் திறனை தெரிந்து கொள்வது மற்றும் வாழ்வில் பயன்படுத்துவது ஆகும்.

மேலாண்மையில் மேலாளரின் முடிவெடுக்கும் திறன் அவரின் மூத்த அதிகாரியிடம் பெற்ற அனுபவத்தை கொண்டு மேற்கொள்ளும் போது மேலாண்மை கலையை பிரதிபலிக்கிறது.

மேலாண்மை என்பது ஒரு கலையும் அல்ல, அறிவியலும் அல்ல இரண்டின் தொகுப்பாகும்.